(இ) இந்த இருப்பிலிருந்து ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தொழிலதிபர்களுக்கு எவ்வளவு கொடுக்கப் பட்டது ?

(உ) 1—3—67 முதல் 1—7—68 வரை புதிதாக எத்தனை பேருக்கு உரிமம் வழங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) 1967 மார்ச்சில் **3·729** மெட்ரிக் டன் அளவுள்ள துரு எறு எஃகுத் தகடுகள் இருப்பிலிருந்தன.

(இ) 151 தொழிற் பிரிவுகளுக்கு வழங்க வேண்டியிருந்ததாலும், மேற்கூறிய இருப்பு கொஞ்சமாக இருந்ததாலும், யாருக்கும் அதிலிருந்து வழங்க முடியவில்லை.

(உ) துரு எறு எஃகுத் தகடுகளை இறக்குமதி செய்வதற்கு மாநில தொழில் வணிக நெறியாளர் அலுவலகம் உரிமம் வழங்குவது இல்லை. ஆனால், அத்தகைய எஃகுத் தகடுகளை நேரடியாக இறக்குமதி செய் வதற்கு உரிமங்களைப் பெற 1—3—1967 முதல் 1—7—1968 வரை, இன்றியமையாததெனக் குறிப்பிடும் சான்றுகளை, நெறியாளர் அலுவலகம் புதிதாக 211 பேர்களுக்கு வழங்கியுள்ளது.

'Polyester Fibre' Factory

* 279 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to establish 'Polyester' Factory in Tamil Nadu ; and

(*b*) at what cost and where this will be established?

"பாலிஸ்டர் இழை" தொழிற்சாலை.

***திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு என். ஆர். தியாகராஜன்** சார்பில்) : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் "பாலிஸ்டர்" தொழிற்சாலை நிறுவும் உத்தேசம் உண்டா ?

(இ) எவ்வளவு செலவில், எங்கு நிறுவப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) & (இ) : சென்னையில் ஏறக் குறைய பத்து கோடி ரூபாய் செலவில் "பாலிஸ்டர் இழை" (Polyester Fibre) உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக தனியார் கம்பெனி ஒன்றிற்கு மத்திய அரசு பூர்வாங்க அனுமதியை அளித்துள்ளது.

Text-Books Committee

* 280 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the names of the members of the Tamil Nadu Text-Books Committee ; and

(*b*) whether the list of books selected by them was altered later on?

பாட புத்தகக் குழு.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தமிழகப் பாடப் புத்தகக் குழுவின் உறுப்பினர்கள் யார், யார் ?

(இ) இவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில புத்தகங்கள் பின்னர் மாற்றப்பட்டனவா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) தமிழ்நாட்டின் பாடப் புத்தகக் குழுவில் தமிழ்நாட்டின் மூன்று பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களும் அல்லது அவர்களுக்காக அவர்களுடைய பிரதிநிதிகளும், ஒப்புதல் பெற்ற, கல்வி நிறுவனங்களில் உள்ள, அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களும் உட்பட 25 உறுப்பினர்களுக்கு மேற்படாமல் உள்ளனர்.

(இ) இல்லை.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஏதேனும் விதி முறை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அரசாங்கம் யார் யார் இப்படிப் பட்ட புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தகுதி பெற்றிருக்கிறார்கள் என்று ஏற்கெனவே கலந்து இந்த முடிவு எடுக்கிறோம்.

Writ Petitions

* 281 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of writ petitions filed in High Court from 6–3–1967 to the end of March 1968 against the orders of the Government of Tamil Nadu;

(*b*) the number of Government Orders which were stayed by the High Court on the writ petition; and

(*c*) the number of judgments which went against the Government?

ரிட் மனுக்கள்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1967 மார்ச் 6-ஆம் தேதி முதல் 1968 மார்ச் முடிய சென்னை உயர்நீதி மன்றத்தில் தமிழக சர்க்கார் உத்திரவுகள் மீது போடப்பட்ட ரிட் மனுக்கள் எத்தனை ?

(இ) ரிட் மீது சர்க்கார் உத்தரவுகள் எத்தனை ஸ்டே செய்யப்பட்டன?

(உ) சர்க்காருக்கு விரோதமாக எத்தனை தீர்ப்புகள் செய்யப் பட்டன ?